ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

நம்பெருமாள் விஜயம்

(ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:)

(மலர்- 390) Apr (1) / 2023

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

'ஸ்ரீ அஹோபில தாஸன்' க.ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

காவேரி வர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ:
ஸ்ரீரங்கநாதோ ஜயது ஸ்ரீரங்கஸ்ரீச்ச வர்த்ததாம்

ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:

உட்பொதிவு

1. லக்ஷ்மீ தந்த்ரம் 3

2. ஸங்கல்ப ஸூர்யோதயம் 5

3. தத்வ த்ரயம்..6

4. திருவாய்மொழி (ஈடு வ்யாக்யானம்)..13

5. ஸ்தோத்ர ரத்னம் (பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானம்)..21

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபாஞ்சராத்ர ஆகம நூலான

லக்ஷ்மீ தந்த்ரம்

(பகுதி – 210)

55-2. வராஹ அநல ஸம்யுக்தஸ்தார: சுத்தஸ்ததாதிக:
56-1. விஜயாய நம: ஸோயம் விஜயஸ்ய சதுர்யுக:

பொருள் – வராஹம் மற்றும் அக்னி ஆகியவற்றைக் குறிக்கும் "ர" என்பதுடன் இணைந்து, அதன் பின்னர் "விஜயாய நம:" என்பது அமைந்துள்ள மந்த்ரமானது, விஜயத்தைக் குறிப்பதாக உள்ளது ("ஓம் வ்ரோம் விஜயாய நம:").

56-2. கோவிந்த: ஸ அநலோ மாயீ வ்யாபிமாந் ப்ரணவாந்தர:
57-1. கங்காயை நம இதி ஏவம் கங்காயா முநிவர்ணக:

பொருள் - தொடக்கத்தில் "ஓம்" என்பதும், தொடர்ந்து கோவிந்தம் என்பதைக் குறிக்கும் "க" என்பது, அக்னியைக் குறிக்கும் "ர" என்பதுடன் இணைந்து, தொடர்ந்து "ஈ" என்பது அமைந்து, அதன் பின்னர் "கங்காயை நம:" என்பது அமைந்துள்ள மந்த்ரமானது, கங்கையைக் குறிப்பதாக முனிவர்கள் வர்ணிக்கிறார்கள் ("ஓம் க்ரீம் கங்காயை நம:").

57-2. ஸமாய: ஸ அநல: ஸூக்ஷ்மோ வ்யாபிமாந் ப்ரணவாந்தர:
58-1. யமுநாயை நமச்சாயம் யாமுநேயச்சதுர்யுக:

பொருள் - தொடக்கத்தில் "ஓம்" என்பதும், தொடர்ந்து மாயா என்பதைக் குறிக்கும் "ய" என்பது, அக்னியைக் குறிக்கும் "ர" என்பதுடன் இணைந்து, தொடர்ந்து "ஈ" என்பது அமைந்து, அதன் பின்னர் "யமுநாயை நம:" என்பது அமைந்துள்ள

மந்த்ரமானது, யமுநையைக் குறிப்பதாக முனிவர்கள் வர்ணிக்கிறார்கள் ("ஓம் ய்ரீம் யமுநாயை நம:").

ஸ்ரீரங்கநாச்சியார் திருவடிகளே சரணம்

ஸ்ரீகமலவல்லி நாச்சியார் திருவடிகளே சரணம்

... தொடரும்

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமானுஜாய நம:
ஶ்ரீரங்கநாயகி ஸமேத ஶ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஶ்ரீவேதாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த

ஸங்கல்ப ஸூர்யோதயம்

(பகுதி – 76)

[விவேகன் மகிழ்ச்சியுடன்] நண்பனே! சிறந்த நடத்தை கொண்ட உன்னால் எனக்கு நன்கு நினைவூட்டப்பட்டது. உனது உதவி இருப்பதால், இனி செய்யவேண்டியவை அனைத்தும் செய்து முடிக்கப்பட்டதாகவே ஆகிறது.

107. சம தமமுகாஸ்திஷ்டந்த்வேதே சதம் சதமுஸ்திதா:
நிருபாதி மஹாமோஹ ச்ரத்தாநிவாரணலம்படா:
தநுஜமதநே விஷ்வக்ஸேநோ ஹரேஸ்ததந்யதீ:
ப்ரதிமததமச்சேதே ஹேதுஸ்த்வமப்யநகோ மம

பொருள் - [விவேகன் கூறுதல்] புலனடக்கம், மன அடக்கம் என்பது போன்ற நூற்றுக்கணக்கான குணங்கள், மஹாமோஹன் மீது ஜீவாத்மாக்கள் வைத்துள்ள நம்பிக்கையைத் தகர்ப்பதற்காகத் திரண்டு வந்துள்ளன. அது இருக்கட்டும். ஶ்ரீஹரியானவன் அஸுரர்களை அழிப்பதற்காக, அவனை அல்லாமல் வேறு எதிலும் கவனம் அற்ற விஷ்வக்ஸேநர் எவ்விதம் அவனுடன் உள்ளாரோ அதே போன்று, விரோதிகளால் உண்டாகும் அறியாமை என்னும் இருளைப் போக்க நீ எனக்கு எந்தக் குறையும் இன்றி காரணமாக இருப்பாய்.

தூப்புல்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீரங்கநாச்சியார் ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் அருளிச் செய்த

தத்வ த்ரயம்

இதற்கு ஸ்வாமி மணவாள மாமுனிகள் அருளிச் செய்த வ்யாக்யானம்
(பகுதி – 88)

190. மநுஷ்யத்வம், திர்யக்த்வம், ஸ்தாவரத்வம் போலே, கௌணத்வமும் இச்சையாலே வந்தது; ஸ்வரூபேண அன்று.

அவதாரிகை – இனி, முக்க்ய விபவத்தோடு கௌண விபவத்துக்குண்டான ஸாம்ய வைஷம்யங்களை யருளிச்செய்கிறார் (மநுஷ்யத்வம்) என்று தொடங்கி.

விளக்கம் – அடுத்து, முக்கியமான விபவம் மற்றும் முக்கியம் அல்லாத விபவம் ஆகியவற்றுக்கு இடையே உள்ள ஒப்புமை மற்றும் ஏற்றத்தாழ்வுகளை அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம் – அதாவது, "மதிச்சயா ஹி கௌணத்வம் மாநுஷ்யமிவசேச்சயா, ஸூகரத்வஞ்ச மத்ஸ்யத்வம் நாரஸிம்ஹத்வமேவச, யதாவா தண்டகாரண்யே குப்ஜாம்ரத்வம் மமேச்சயா, யதா வாஜிமுகத்வஞ்ச மம ஸங்கல்பதோ பவேத், ஸேநாபதே! மமேச்சாதோ கௌணத்வம் ந ச கர்மணா" என்கிறபடியே, ராமக்ருஷ்ணத்வாதியான மநுஷ்யத்வம், மத்ஸ்ய கூர்மத்வாதியான திர்யக்த்வம், குப்ஜாம்ரத்வமாகிற ஸ்தாவரத்வம் ஆகிறவிவை இச்சையாலேயானாப்போலே, ஆவேச ரூபமான கௌணத்வமும் இச்சையாலே வந்ததென்னுமாகாரமொக்கும். அப்ராக்ருதமாயிருந்துள்ள ஸ்வாஸாதாரண விக்ரஹத்தோடே வந்ததன்றென்கை. உபாத்த வசனங்கள் இச்சையாலே வந்ததென்கிற மாத்ரத்தைச் சொல்லிற்றேயாகிலும், கௌணத்வமாவது மநுஷ்யத்வாதிகள்போலே, அப்ராக்ருத திவ்ய ஸம்ஸ்தானத்தை இதர ஸஜாதீயமாக்கிக் கொண்டு அவதரித்ததல்லாமையாலே ஸ்வரூபேண வந்ததன்றென்னுமிடமும் ஸித்தமிறே.

விளக்கம் - அதாவது, ஸ்ரீவிஷ்வக்ஸேந ஸம்ஹிதையில் – மத் இச்சயா ஹி கௌணத்வம் மாநுஷ்யம் இவ ச இச்சயா, ஸூகரத்வம் ச மத்ஸ்யத்வம் நாரஸிம்ஹத்வம் ஏவ ச, யதாவா தண்டகாரண்யே குப்ஜாம்ரத்வம் மம இச்சயா, யதா வாஜிமுகத்வம் ச மம ஸங்கல்பதோ பவேத், ஸேநாபதே! மம இச்சாதோ கௌணத்வம் ந ச கர்மணா - எனது இச்சையால் முக்கியம் அல்லாத விபவங்களும் ஏற்படுகின்றன. இராமன் என்பது போன்ற மனித வடிவில் உள்ள அவதாரங்கள் எனது இச்சையால் ஏற்பட்டன; இதே போன்று வராகம், மீன், நரசிம்ஹம், தண்டவனத்தில் குட்டையான மாமரம் போன்றவையும் எனது இச்சையால் ஏற்பட்டன; இது போன்றே குதிரை முகமாக எனது ஸங்கக்பத்தால் அவதரிக்கிறேன். ஸேநை நாதரே! ஆகவே முக்கியம் அல்லாத விபவங்களும் எனது விருப்பத்தால் அல்லவோ ஏற்பட்டன? கர்மங்கள் காரணமாக அல்ல – என்பதற்கு ஏற்ப, இராமன் மற்றும் க்ருஷ்ணன் என்பதான மனித அவதாரங்கள், மீன் மற்றும் பன்றி என்பது போன்ற விலங்கு வடிவங்கள், குட்டையான மாமரம் போன்ற தாவர வடிவங்கள் போன்ற பலவும் அவனுடைய விருப்பத்தால் ஏற்பட்டன; இவை போன்று ஆவேச ரூபமாக உள்ள முக்கியம் அல்லாத அவதாரம் அவனது இச்சையால் ஏற்பட்டன என்பது பொருந்தும். ஆனால் இவை அனைத்தும் இந்த உலகில் காண இயலாதபடியும், அவனுக்கே உரிய திருமேனி கொண்டபடியும் வந்தவை அல்ல. இதுவரை கூறுப்பட்ட கருத்துக்கள் பலவும், முக்கியம் அல்லாத விபவங்கள் அனைத்தும், அவனுடைய இச்சையால் ஏற்பட்டன என்பதை மட்டுமே கூறின; ஆனால், இவை அனைத்தும், மனித அவதாரம் என்பவை போன்று, இந்த உலகில் காணமுடியாத திருமேனி, மற்ற பிறவிகளுக்கு ஒற்றுமையாகக் காணலாம்படியாக வந்தவை அல்ல; ஆகவே இவை அனைத்தும் அவனுடைய ஸ்வரூபத்துடன் அவதரித்தவை அல்ல என்பது தேறுகிறது.

191. அதில், அப்ராக்ருத விக்ரஹங்களுமாய், அஜஹத் ஸ்வபாவ விபவங்களுமாய், தீபாதுத்பந்ந ப்ரதீபம் போலேயிருக்கக் கடவதான முக்ய ப்ராதுர்ப்பாவங்களெல்லாம் முமுக்ஷுக்களுக்கு உபாஸ்யங்களாயிருக்கும்.

அவதாரிகை – இன்னமும், உபாஸ்யத்வ அநுபாஸ்யத்வ கதநமுகத்தாலும், உபயத்துக்குமுண்டான விசேஷத்தை தர்சிப்பிப்பதாகத் திருவுள்ளம் பற்றி, ப்ரதமம் முக்ய விபவத்தினுடைய உபாஸ்யத்வத்தை ஸஹேதுகமாக அருளிச்செய்கிறார் (அதில்) என்று தொடங்கி.

விளக்கம் – மேலும், உபாஸிக்கத்தக்கவை மற்றும் உபாஸிக்கத்தகாதவை என்பதைக் கூறுவதன் மூலமும், முக்கியமான விபவம் மற்றும் முக்கியம் அல்லாத விபவம் என்ற இரண்டிற்கும் உள்ள சிறப்புகளை உணர்த்துவதாகத் திருவுள்ளம் கொண்டு, முதலில் முக்கியமாக உள்ள விபவங்களுடைய உபாஸிக்கத்தக்க தன்மையை காரணத்துடன் கூறுகிறார்.

வ்யாக்யானம் – அதாவது, உபயவிதமான விபவத்திலும் வைத்துக்கொண்டு, "ப்ராதுர்ப்பா வாஸ்து முக்க்யாயே மதம்சத்வாத் விசேஷத:, அஜஹத் ஸ்வபாவ விபவா திவ்யா: ப்ராக்ருத விக்ரஹா, தீபாத் தீபா இவோத்பந்நா ஜகதோ ரக்ஷணாய தே, அர்ச்சயா ஏவஹி ஸேநேச ஸம்ஸ்ருத்யுத்தரணாயதே, முக்க்யா உபாஸ்யாஸ் ஸேநேச, அநர்ச்ச்யாந் இதராந் விது:" என்கிறபடியே, "ஆதியஞ்சோதியுருவை அங்கு வைத்திங்குப் பிறந்த"தாகையாலே அப்ராக்ருத விக்ரஹங்களுமாய், "அஜோபி ஸந் அவ்யயாத்மா பூதாநாமீச்வரோபி ஸந்" என்கையாலே விடாதேயிருந்துள்ள அஜத்வ அவயயத்வ ஸர்வேச்வரத்வாதியான ஸ்வபாவ விபவங்களையுடையவையுமாய், அத ஏவ தீபத்தில் நின்றும் உத்பந்நமான ப்ரதீபம், ஸ்வகாரணமான தீபத்தினுடைய ஸ்வபாவத்தையுடையதா யிருக்குமாப்போலே, ஸ்வகாரண துல்ய ஸ்வபாவமாயிருக்கிற முக்க்ய ப்ராதுர்ப்பாவங்களெல்லாம் முமுக்ஷுக்களுக்கு உபாஸ்யங்களாயிருக்குமென்கை.

விளக்கம் – அதாவது, முக்கியமான விபவம் மற்றும் முக்கியம் அல்லாத விபவம் என்ற இரண்டையும் நோக்கும்போது, ஸ்ரீவிஷ்வக்ஸேந ஸம்ஹிதை - ப்ராதுர்ப்பா வாஸ்து முக்க்யாயே மதம்சத்வாத் விசேஷத:, அஜஹத் ஸ்வபாவ விபவா திவ்யா: ப்ராக்ருத விக்ரஹா, தீபாத் தீபா இவோத்பந்நா ஜகதோ ரக்ஷணாய தே, அர்ச்சயா ஏவஹி ஸேநேச ஸம்ஸ்ருத்யுத்தரணாயதே, முக்க்யா உபாஸ்யாஸ் ஸேநேச, அநர்ச்ச்யாந் இதராந் விது: - எந்தெந்த அவதாரம் சிறப்பான எனது அம்சத்தைப் பெற்றுள்ளனவோ அவை முக்கியமானவையே ஆகும். விட இயலாத இயல்புகள், வைபவங்கள், திவ்யமான சிறப்புகள், இந்த உலகில் காண இயலாத திருமேனி போன்றவற்றுடன் கூடியபடி, தூபத்திலிருந்து எழுகின்ற தீபம் போன்று ப்ரகாசிக்கும் அத்தகைய அவதாரங்கள், இந்த ஜகத்தின் காத்தலுக்காக ஆகின்றன. ஸேநைநாதனே! ஸம்ஸாரம் என்ற ஸமுத்ரத்தைத் தாண்டுவதற்காக, அவை ஆராதிக்கத்தக்கவை ஆகும். முக்கியமான அவதாரங்கள் ஆராதிக்கத்தக்கவை, மற்றவை ஆராதிக்கத்தக்கவை அல்ல - என்பதற்கு ஏற்ப, திருவாய்மொழி (3-5-3) -

ஆதியஞ்சோதியுருவை அங்கு வைத்திங்குப் பிறந்த - என்பதாக இங்கு அவதரிப்பதால், கீதை (4-6) – அஜோபி ஸந் அவ்யயாத்மா பூதாநாமீச்வரோபி ஸந் - பிறப்பற்றவனாகவும், அழிவற்றவனாகவும், அனைத்திற்கும் ஈச்வரனாக இருந்தாலும், நான் இங்கு அவதரிக்கிறேன் - என்பதால், கைவிட இயலாத பிறப்பற்ற தன்மை, அழிவற்ற தன்மை, ஸர்வேச்வரனாக உள்ள இயல்பு போன்றவற்றைக் கொண்டவையாக, தீபத்திலிருந்து புறப்பட்ட ஒளியானது தனக்குக் காரணமான தீப ரூபத்தின் தன்மைகளை விடாமல் உள்ளது போன்று, தனக்குக் காரணமான பரம்பொருளுடைய தன்மையை ஒட்டியபடியே உள்ள முக்கிய விபவங்கள் அனைத்தும், மோக்ஷத்தில் விருப்பம் கொண்டவர்களால் உபாஸிக்கப்பட வேண்டியவை ஆகும்.

192. விதி சிவ பாவக வயாஸ ஜாமதக்ந்யார்ஜுந வித்தேசாதிகளாகிற கௌண ப்ராதுர்ப்பாவங்களெல்லாம் அஹங்கார யுக்த ஜீவர்களை யதிஷ்டித்து நிற்கையாலே, முமுக்ஷுக்களுக்கு அநுபாஸ்யங்கள்.

அவதாரிகை – அநந்தரம், கௌண விபவத்தினுடைய அநுபாஸ்யத்வத்தை ஸஹேதுகமாக வருளிச்செய்கிறார் (விதிசிவ) இத்யாதியாலே.

விளக்கம் – அடுத்து, முக்கியம் அல்லாத விபவங்களுடைய, உபாஸிக்கத்தகுந்ததாக இல்லாத தன்மையை, அவற்றின் காரணத்துடன் அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம் - அதாவது, “அநர்ச்ச்யாநபி வக்ஷ்யாமி ப்ராதுர்ப்பாவாந் யதாக்ரமம், சதுர்முகஸ் து பகவாந் ஸ்ருஷ்டி கார்யே நியோஜித:; சங்கராக்க்யோ மஹாருத்ரஸ் ஸம்ஹாரே விநியோஜித:, மோஹநாக்கயஸ் ததா புத்தோ வ்யாஸச்சைவ மஹாந்ருஷி:, வேதாநாம் வ்யஸநே தத்ர தேவேந விநியோஜித:, அர்ஜுநோ தந்விநாம் ச்ரேஷ்ட்டோ ஜாமதக்ந்யோ மஹாந்ருஷி:, வஸூநாம் பாவகச்சாபி வித்தேசச்ச ததைவ ச, ஏவமாத்யாஸ் து ஸேநேச! ப்ராதுர்ப்பாவைரதிஷ்டிதா:, ஜீவாத்மாநஸ் ஸர்வ ஏதே நோபாஸ்திர் வைஷ்ணவீ ஹி ஸா, ஆவிஷ்டமாத்ராஸ் தே ஸர்வே கார்யார்த்தமமிதத்யுதே, அநர்ச்ச்யாஸ் ஸர்வ ஏவைதே விருத்தவாந் மஹாமதே, அஹங்க்ருதியுதாச் சேமே ஜீவமிச்ரா ஹ்யதிஷ்டிதா:” என்கிறபடியே, ஸ்ருஷ்டிகர்த்தாவான ப்ரஹ்மாவும், ஸம்ஹார கர்த்தாக்களான சிவ பாவகர்களும்,

வேதங்களை வ்யஸித்த வ்யாஸனும், துஷ்ட க்ஷத்ரிய நிரஸநம் பண்ணின ஜமதக்நி புத்ரனான பரசுராமனும், “அகார்ய சிந்தா ஸமகாலமேவ ப்ராதுர்ப்பவம் சாபதர: புரஸ்தாத்” என்கிறபடியே, சாபதரனாய்க் கொண்டு ஜகத்தை ரக்ஷித்துக் கொண்டு போந்த கார்த்தவீரியார்ஜுநனும், ஔதார்ய ப்ரதாநனான வித்தேசனும், ஆதி சப்தத்தாலே க்ரோடீ க்ருதரான ககுத்ஸ்த முசுகுந்த ப்ரப்ருதிகளுமாகிற கௌண ப்ராதுர்ப்பாவங்களெல்லாம், ஸ்வாதந்த்ர்ய ரூபமான அஹங்கார யுக்தரான ஜீவர்களை கார்யார்த்தமாக ஆவேச முகேந அதிஷ்ட்டித்து நிற்கையாலே, புபுக்ஷுக்களாயிருப்பார்க்கொழிய முமுக்ஷுக்களுக்கு உபாஸ்யங்களன்றென்கை. (வ்யாஸ ஜாமதக்ந்யர்ஜுந) என்கிறவிடத்தில் அர்ஜுநனென்றது பாண்டு புத்ரனான அர்ஜுநனையாகவுமாம், அவனையும் ஆவேசாவதாரமாக இதிஹாஸாதிகளிலே சொல்லுகையாலே.

விளக்கம் – ஸ்ரீவிஷ்வக்ஸேந ஸம்ஹிதையில் – அநர்ச்ச்யாநபி வக்ஷ்யாமி ப்ராதுர்ப்பாவாந் யதாக்ரமம், சதுர்முகஸ் து பகவாந் ஸ்ருஷ்டி கார்யே நியோஜித:; சங்கராக்ய்யோ மஹாருத்ரஸ் ஸம்ஹாரே விநியோஜித:, மோஹநாக்கயஸ் ததா புத்தோ வ்யாஸச்சைவ மஹாந்ருஷி:, வேதாநாம் வ்யஸநே தத்ர தேவேந விநியோஜித:, அர்ஜுநோ தந்விநாம் ச்ரேஷ்ட்டோ ஜாமதக்ந்யோ மஹாந்ருஷி:, வஸூநாம் பாவகச்சாபி வித்தேசச்ச ததைவ ச, ஏவமாத்யாஸ் து ஸேநேச! ப்ராதுர்ப்பாவைரதிஷ்டிநா:, ஜீவாத்மாநஸ் ஸர்வ ஏதே நோபாஸ்திர் வைஷ்ணவீ ஹி ஸா, ஆவிஷ்டமாத்ராஸ் தே ஸர்வே கார்யார்த்தமமிதத்யுதே, அநர்ச்ச்யாஸ் ஸர்வ ஏவைதே விருத்தவாந் மஹாமதே, அஹங்க்ருதியுதாச் சேமே ஜீவமிச்ரா ஹ்யதிஷ்டிதா: – அர்ச்சனை செய்யத்தகாதபடி உள்ள அவதாரங்கள் குறித்து நான் (ஸர்வேச்வரன்) வரிசையாகக் கூறுகிறேன். ஸ்ருஷ்டிப்பதற்காக நியமிக்கப்பட்ட நான்முகன், அழிக்கும் பணியில் நியமிக்கப்பட்ட ருத்ரனாகிய சங்கரன், மயக்கும் தொழிலில் நியமிக்கப்பட்ட புத்தர், வேதங்களைச் சரியாகப் பிரிப்பதற்காக நியமிக்கப்பட்ட வ்யாஸர், வில் தொழிலில் சிறந்த கார்த்தவீர்யார்ஜுனன், ஜமதக்னியின் புத்திரனாகிய பரசுராமன், வஸுக்களில் அக்னி மற்றும் குபேரன் ஆகிய அனைவரும் ஆவேச அவதாரங்களால் அதிஷ்டானம் செய்யப்பட்டவர்கள் ஆவர். ஸேனை நாதரே! இவர்கள் அனைவருமே விஷ்ணுவாகிய என்னால் வ்யாபிக்கப்பட்ட ஜீவாத்மாக்கள் என்பதால், இவர்களை அர்ச்சிக்கக்கூடாது. சிறந்த புத்தி கொண்டவரே! இவர்கள் ஒரு குறிப்பிட்ட செயலுக்காக என்னால் ஆவேசிக்கப்பட்டவர்கள் ஆவர். இவர்கள் அஹங்காரம் கொண்ட ஜீவர்களாக

உள்ளதால், ஆராதிக்கத்தக்கவர்கள் அல்லர் – என்று கூறுவதற்கு ஏற்ப, நான்முகன் போன்றவர்களும், வேதங்களைப் பிரித்த வ்யாசரும், துஷ்ட அரசர்களை அழித்த பரசுராமனும், "அகார்ய சிந்தா ஸமகாலமேவ ப்ராதுர்ப்பவம் சாபதர: புரஸ்தாத் - தகாத செயலைச் செய்யப் போகிறோம் என்று எண்ணிய உடனேயே அவர்கள் முன்பாக வில்லை ஏந்தி அடக்குவதற்காகத் தோன்றுபவன் – என்பதற்கு ஏற்ப உள்ள இந்த ஜகத்தைக் காத்தபடி உள்ள கார்த்தவீர்யார்ஜுனன், தாராள குணம் கொண்ட குபேரனும், சூர்ணையில் உள்ள "ஆதி - தொடக்கமான" என்பதால் கூறப்பட்ட காகுத்தன் மற்றும் முசுகுந்தன் போன்ற முக்கியம் அல்லாத பல அவதாரங்கள் ஆவர்; இவ்விதமாக, தாங்கள் சுதந்திரமானவர்கள் என்ற சிந்தனை வடிவமாக உள்ள அஹங்காரத்தைக் கொண்ட ஜீவாத்மாக்களை, ஒரு செயலுக்காக ஆவேச முகமாக ஸர்வேச்வரன் வ்யாபித்து நிற்கிறான். ஆகவே இன்பத்தை நாடுபவர்கள் அல்லாமல் மோக்ஷத்தை விரும்புபவர்களால், இவர்கள் உபாசிக்கத் தக்கவர்கள் அல்லர். (வ்யாஸ ஜாமதக்நி அர்ஜுந) – இந்த இடத்தில் கூறப்பட்ட அர்ஜுனன், "பாண்டு புத்திரனாகிய அர்ஜுனன்" என்று கூறுவதாகவும் கொள்ளலாம்; காரணம், இதிஹாஸங்களில் அவனும் ஆவேச அவதாரமாகக் கூறப்படுவதால் ஆகும்.

வ்யாக்யானம் - இந்த கௌண ப்ராதுர்ப்பாவ அநுபாஸ்யத்வந்தான், "ப்ரஹ்ம ருத்ரரார்ஜுந வ்யாஸ ஸஹஸ்ரகர பார்க்கவா:, ககுத்ஸ்தாத்ரேய கபில புத்தாத்யா யே ஸஹஸ்ரச:, சக்த்யாவேசாவதாராஸ் து விஷ்ணோஸ் தத்கால விக்ரஹா:, அநுபாஸ்யா முமுக்ஷுணாம் யதேந்த்ராக்ந்யாதி தேவதா:" என்று ஸம்ஹிதாந்தரத்திலும் சொல்லப்பட்டதிறே. உபாத்த வசனங்களில் புத்தமுநியையும் ஆவேசாவதாரங்களில் ஒன்றாகச் சொன்னவிது, "மாவுருவில் கள்ளவேடம்" என்று ஸ்வேந ரூபேண அவதரித்ததாகச் சொன்ன நம் ஆசார்யர்கள் வசனத்தோடு விருத்தமன்றோவென்னில், கல்ப பேதத்தாலே அப்படியும் செய்யக் கூடுமாகையாலே விருத்தமன்று. ஜாமதக்ந்யன் ஸ்வரூபாவேசாவதாரமாயிருக்க, சக்த்யாவேசங்களோடே ஸஹபடித்தது, ஸ்வரூபேண ஆவேசிக்கிறது சக்தி விசேஷத்தாலேயாகையாலே என்று நியமித்துக் கொள்வது.

விளக்கம் - இத்தகைய முக்கியம் அல்லாத அவதாரங்களை உபாஸனை செய்தல் கூடாது என்பதை, "ப்ரஹ்ம ருத்ர அர்ஜுந வ்யாஸ ஸஹஸ்ரகர பார்க்கவா:, ககுத்ஸ்த ஆத்ரேய கபில புத்தாத்யா யே ஸஹஸ்ரச:, சக்தி ஆவேச அவதாராஸ் து விஷ்ணோஸ் தத்கால விக்ரஹா:, அநுபாஸ்யா முமுக்ஷுணாம் யத் இந்த்ர அக்நி

ஆதி தேவதா: - நான்முகன், ருத்ரன், அர்ஜுனன், வ்யாசர், சூரியன், பரசுராமன், காகுத்தன், ஆத்ரேயன், கபிலர், புத்தர் போன்ற பலரும்; சிறப்பான சக்தி கொண்ட பலரும்; அந்தந்த காலத்தில், அந்தந்த செயலுக்காக மட்டுமே விஷ்ணுவின் சக்தியால் ஆவேசிக்கப்பட்ட அவதாரங்கள் ஆவர். இவர்கள், இந்த்ரன் மற்றும் அக்னி முதலான தேவர்களைப் போன்று, மோக்ஷத்தில் விருப்பம் கொண்டவர்களால் உபாஸிக்கத்தக்கவர்கள் அல்லர்" என்று மற்ற ஸம்ஹிதைகளில் கூறப்பட்டது. ஆனால், கடந்த வாக்கியத்தில் புத்த முனியை ஆவேச அவதாரங்களில் ஒன்றாகக் கூறப்பட்டது என்பது, ஆசார்யஹ்ருதயத்தில் (2-90) – மாவுருவில் கள்ளவேடம் - என்று ஸர்வேச்வரனே இப்படியாக அவதரித்ததாக நம்முடைய ஆசார்யர்கள் உரைத்த கருத்துடன் முரண்படும் அல்லவோ என்று கேட்கலாம். கல்ப வேற்றுமை காரணமாக இவ்விதம் செய்யக்கூடும் என்பதால் முரண்பாடு இல்லை. ஜமதக்னியின் புத்திரனாகிய பரசுராமன், ஸர்வேச்வரனுடைய ஸ்வரூபத்தால் ஆவேசம் பெற்ற அவதாரமாக உள்ளபோதிலும், சக்தி ஆவேசத்துடன் சேர்த்துக் கூறப்பட்டது ஏனென்றால், "ஸ்வரூபத்தால் ஆவேசித்தல் என்பது, சக்தியின் சிறப்பு காரணமாகவே ஆகும்", என்பதால் ஆகும்.

ஸ்வாமி மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்

ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி வடக்குத் திருவீதிப் பிள்ளை அருளிச் செய்த
முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு வ்யாக்யானம்
மூலமும், எளிய தமிழ்நடையும்
(பகுதி – 355)

5-3-6 அன்னை என் செய்யில் என்? ஊர் என் சொல்லில் என்? தோழிமீர்!
என்னை இனி உமக்கு ஆசை இல்லை அகப்பட்டேன்
முன்னை அமரர் முதல்வன் வண்துவராபதி
மன்னன் மணிவண்ணன் வாசுதேவன் வலையுளே

பொருள் – எனக்கு ஏற்படும் சுகதுக்கங்களை உங்களுக்கும் சமமாக எடுத்துக்கொள்ளும் தோழிகளே! முதன்மையாக உள்ள நித்யஸூரிகளுக்கு முதன்மையாக மேன்மை கொண்டவனும், எல்லையற்ற ஸம்பத் கொண்டதான ஸ்ரீத்வாரகைக்கு அதிபதியாக உள்ளவனும், இவை இரண்டும் இல்லையென்றாலும், விட இயலாதபடி நீலரத்னம் போன்று காண்பதற்கு இனிமையான குணம் கொண்டவனும் ஆகிய வாஸுதேவனுடைய கவர்ந்து இழுக்கக்கூடியதான லீலைகள் என்னும் வடிவில் உள்ள வலையில், தப்ப இயலாதபடியாக நான் அகப்பட்டேன். இவ்விதம் இனி மீட்பதற்கு இயலாதபடி உள்ள என்னைப் பற்ற உங்களுக்கு ஆசைப்படவேண்டியது ஏதும் இல்லை. எனவே எனது தாயார் எது செய்தால் என்ன? ஊரில் உள்ளவர்கள் எது கூறினால் என்ன?

அவதாரிகை - கீழ், “அன்னை என் செய்யும்” என்று, “நீ செய்கிற இத்தைப் பொறாள் கிடாய்” என்ன; “அவள் பொறாதே செய்வதென்?” என்னுமளவிலே நின்றது. இதில், “நீ இப்படி வ்யவஸிதையானபடியறிந்தால், அவள் ஜீவியாள் கிடாய்” என்ன; “அவள் ஜீவிக்கிலென்? முடியிலென்?” என்கிறாள்.

விளக்கம் – கடந்த பாசுரத்தில் நாயகி தோழியிடம், “எனது தாயார் என்ன செய்துவிடுவாள்?” என்பதற்கு தோழியானவள், “நீ செய்யும் இவற்றைப் பொறுக்க மாட்டாள்”, என்றாள். இதற்கு நாயகி, “அவள் பொறுத்துக் கொள்ள இயலாமல் என்ன செய்வாள்?”, என்றாள். இந்தப் பாசுரத்தில், “நீ இவ்விதம் உறுதியுடன் இருந்தால் உனது தாயார் பிழைக்கமாட்டாள்”, என்று தோழி உரைக்க, இதற்கு நாயகி, “அவள் பிழைத்தால் என்ன, பிழைக்காமல் போனால் என்ன?”, என்கிறாள்.

வ்யாக்யானம் - (அன்னையென் செய்யிலென்) அவள் ஜீவிக்கிலென், முடியிலென் என்கிறாள். “குரவ: கிங்கரிஷ்யந்தி” முடியாதேயிருப்பார்க்கன்றோ இது பரிஹரிக்க வேண்டுவது. கையற்றார்க்கு இதுகொண்டு காரியமென். (ஊரென் சொல்லிலென்) “தாயாருடைய நாசம் ஒருதலையாகவும் மீளாதபடியாய், இவள் நாயகனுடைய ஸௌந்தர்யாதிகளிலே ப்ரவணையானாள்” என்று ஊரார் பழி சொல்லுவர்கள் கிடாய்” என்ன; (ஊரென் சொல்லிலென்) அவர்கள் பழி சொல்லிலென், குணகீர்த்தநம் பண்ணிலென். “கொல்லை” என்னுதல், “குணம் மிக்கனள்” என்னுதல், இத்தனையன்றோ அவர்கள் பழி சொல்லுவது.

விளக்கம் – (அன்னை என் செய்யில் என்) - “அவள் பிழைத்தால் என்ன? பிழைக்காமல் முடிந்தால் என்ன”, என்கிறாள். ஸ்ரீவிபு. (5-18-22) - குரவ: கிங்கரிஷ்யந்தி - விரக அக்னியால் வாடும் நமக்கு அவர்களால் என்ன செய்ய இயலும் - என்று கூறுவதற்கு ஏற்ப, முடியாமல் இருப்பவர்களுக்கு அல்லவோ இதனை நீக்கவேண்டும்படியாக உள்ளது? உதவி செய்யாதவர்களுக்கு இங்கு கார்யம் ஏதும் இல்லை. (ஊர் என் சொல்லில் என்) - “இவளுடைய தாயின் அழிவு என்பது ஒரு புறம் இருக்க, இவளுடைய நாயகனுடைய அழகு போன்றவற்றில் ஈடுபட்டு, மீட்க இயலாதபடி உள்ளாள்”, என்று ஊரில் உள்ளவர்கள் பழி கூறுவர்; இப்படியாகத் தோழி உரைப்பதைக் கேட்ட நாயகி பதில் அளிக்கிறாள். (ஊர் என் சொல்லில் என்) - ஊரில் உள்ளவர்கள் என்னைக் குறித்துப் பழி கூறினால் என்ன, எனது குணங்களைப் புகழ்ந்து பாடினால் என்ன? திருவாய்மொழி (6-7-4) – கொல்லை - வரம்பு மீறிய செயல்கள் செய்பவள் என்றும், திருவாய்மொழி (6-7-4) - குணம் மிக்கனள் - என்றும் அல்லவோ அவர்கள் பழி கூறுவார்கள்?

வ்யாக்யானம் - (தோழிமீர் இத்யாதி) "தாய் என் செய்யிலென், ஊர் என் சொல்லிலென்" என்று நீங்கள் மேல்விழுந்து என்னை இவ்விஷயத்திலே ப்ரவணையாக்குகையன்றிக்கே, "தாய் பிழையாள், ஊரார் பழி சொல்லுவர்கள்" என்று இத்தைப் பழியாகச் சொல்லுமளவான பின்புங்களது. (என்னை) "தாய் வாயிற் சொற்கேளாள் தன்னாயத்தோடணையாள்" என்கிறபடியே, "தாயார் பிழையாள், ஊரார் பழி சொல்லுவர்கள்" என்றால் மீளாதபடி இவ்விஷயத்திலே ப்ரவணையாயிருக்கிற என்னை. (இனி) உங்கள் சொல்லும் கேளாதபடி கைகழிந்தபின். (உமக்கு) "இது பழி" என்று மீட்கப் பார்க்கிறவளவிலே நிற்கிற உங்களுக்கு. (ஆசையில்லை) இனி என்பக்கல் உங்களுக்கு நசையறவமையும்.

விளக்கம் - (தோழிமீர் இத்யாதி) - நாயகி தோழியிடம், "என்னிடம் நீங்கள், 'உனது தாய் என்ன கூறினால் என்ன? ஊரில் உள்ளவர்கள் என்ன கூறினால் என்ன?' என்று என்னைச் சமாதானம் செய்து, அவன் விஷயத்தில் எனக்கு மேலும் ஈடுபாட்டை ஏற்படுத்த வேண்டும். அதனை விடுத்து என்னிடம், 'உனது தாய் பிழைக்க மாட்டாள், ஊரில் உள்ளவர்கள் பழி கூறுவார்கள்' என்று இவற்றைப் பழியாகக் கூறும்படியாக உங்களுடைய நிலை ஆன பின்னர் ...", என்று உரைத்து மேலும் கூறுகிறாள். (என்னை) - பெரியதிருமொழி (5-5-4) - தாய் பிழையாள், ஊரார் பழி சொல்லுவர்கள் - என்பதற்கு ஏற்ப, "தாய் பிழைக்கமாட்டாள், ஊரில் உள்ளவர்கள் பழி உரைப்பார்கள்" என்று அச்சத்தை ஏற்படுத்தினாலும், கலங்காதபடி இந்த விஷயத்தில் ஈடுபாட்டுடன் உள்ள என்னை. (இனி) - உங்கள் சொற்களையும் கேட்காதபடியாக அகன்ற பின்னர். (உமக்கு) – "இது பழிச் செயலை ஏற்படுத்தும்" என்று உரைத்து மீட்க முயலும் உங்களுக்கு. (ஆசை இல்லை) - இனி என்னிடம் ஆசையற்ற நிலையே ஏற்படும்.

வ்யாக்யானம் - (தோழிமீர்) இதுக்கு முன்பெல்லாம், "தோழி" என்று உயிர்த்தோழியொருத்தியையும் பார்த்து வார்த்தை சொல்லிப் போந்தாள்; இப்போது இவளுடைய வ்யவஸாயாதியத்தைக் கண்டவாறே, "ஆளொரு வார்த்தை சொல்லியாகிலும் மீட்க வேணும்" என்று ஆயவெள்ளமெல்லாம் திரண்டது; அத்தாலே "தோழிமீர்!" என்கிறாள். (அகப்பட்டேன்) "இப்போது 'ஹிதம்' என்கிற புத்தியாலே ஒரு வார்த்தை சொன்னோமே யாகிலும், ஊரார்க்கும் தாய்மார்க்கும் இவ்வருகே எங்களுக்கு ஒரு வாசி நினைத்திருக்க வேண்டாவோ உனக்கு" என்ன;

"அதப்படியே, அதில் குறையில்லை; என்னைக் கடல் கொண்டது காணுங்கோள், நான் என்செய்வே"னென்கிறாள்.

விளக்கம் – (தோழிமீர்) - இதற்கு முன்பு, "தோழி என்று உயிர்த்தோழி ஒருவளிடம் மட்டுமே உரைத்தபடி இருந்தாள். இப்போது இந்த விஷயத்தில் இவளுக்கு உள்ள உறுதியைக் கண்டவுடன், "நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு சொல்லை உரைத்தாவது இவளை மீட்கவேண்டும்", என்று திர்மானித்து வெள்ளமாகத் திரண்டனர். இதனால் "தோழிமீர்" என்று பன்மையில் கூறுகிறாள். (அகப்பட்டேன்) - அவள் உரைத்ததைக் கேட்ட தோழிகள், "இப்போது நன்மை என்றுள்ள புத்தியால் உன்னிடம் கூறினோம். ஆனால் ஊரில் உள்ளவர்கள் மற்றும் தாய்மார்கள் ஆகியவர்களைக் காட்டிலும் எங்களுக்குள்ள வேறுபாட்டை நீ நினைக்க வேண்டாமோ? உன்னை மீட்பதற்கு ஆசை கொள்ளவேண்டாம் என்று நீ எங்களை நோக்கி உரைக்கலாமோ?", என்றனர். இதற்கு நாயகி, "உங்கள் மீது நான் கொண்டுள்ள நட்பு அப்படியேதான் உள்ளது. அதில் குறை ஏதும் இல்லை. என்னைக் கடல் கொண்டு போய்விட்டது. நான் என்ன செய்வேன்?", என்கிறாள்.

வ்யாக்யானம் – (முன்னை இத்யாதி) "சிறியார், பெரியார்" என்று வாசியின்றிக்கே எல்லாரையுமொக்க ஆழப்பண்ணும் கடலிலேயன்றோ நான் அகப்பட்டது. "ரூபௌதார்ய குணை:"; ரூபமென்கிறது வடிவழகை. ஔதார்யமென்கிறது அத்தை எல்லார்க்கும் அநுபவிக்கலாம்படி ஸர்வஸ்வதாநம் பண்ணிக் கொண்டிருக்கை. குணமாவது கொள்ளுகிறவனிலும் தாம் தாழ நின்று கொடுக்கும் சீலம். தன் மேன்மை தோற்ற இருந்து கொடுக்குமன்று ஆள் பற்றாதிறே; அதுக்காகத் தாழ நின்றாயிற்றுத் தன்னைக் கொடுப்பது. "பும்ஸாம்" அந்த ஸௌந்தர்யமும் ஔதார்யமும் சீலமும் வயிரவுருக்காயிற்று, அபலைகள் படுமத்தை வன்னெஞ்சரையும் படுத்தவற்றாயிற்று. அன்றியே, "ப்ரக்ருதி, புருஷர்கள்" என்றாற்போலேயாய், அசித் விலக்ஷணரெல்லாரையும் ஈடுபடுத்தவற்றென்னவுமாம். "த்ருஷ்டி சித்தாபஹாரிணம்" கண்ணுக்கு மநஸ்ஸஹகாரம் வேண்டாதே, கண்ணைப் பின்செல்லுமத்தனை நெஞ்சு. தாய்வேறு, கன்றுவேறாக்கும் விஷயமிறே.

விளக்கம் - (முன்னை இத்யாதி) சிறியவர்கள் மற்றும் பெரியவர்கள் என்னும் வேறுபாடு ஆராயாமல் அனைவரையும் ஒரே போன்று தன்னில் ஆழமாக அமுத்தவல்ல கடலில் அல்லவோ நான் அகப்பட்டேன்? அதாவது தன்னை அடைவதற்கான தகுதி கொண்டவர்கள், அந்தத் தகுதி அற்றவர்கள் என்னும் வேறுபாடு ஆராயாமல், அனைவரையும் தன்னில் ஈடுபடுத்தும் விஷயம் என்று கருத்து. அயோத்யாகாண்டம் (3-29)- ரூப ஔதார்ய குணை: – இராமனுடைய ரூபம் மற்றும் ஔதார்யம் - என்பதற்கு ஏற்ப நான் ஈடுபட்டேன். இங்கு “ரூபம்” என்பது வடிவழகு; “ஔதார்யம்” என்றால், அத்தகைய ரூபத்தை அனைவருக்கும் அவரவர்கள் அனுபவிப்பதற்கு ஏற்றபடி தன்னை முழுவதும் அளித்தல்; “குணம்” என்றால், பெறுபவனைக் காட்டிலும் தான் தாழ நின்று அளிக்கும் சீலம். தனது மேன்மை வெளிப்படும்படி நின்று அளித்தால், அதனைப் பெறுவதற்கான மனிதர்கள் யாரும் இருக்கமாட்டனர்; ஆகவே தாழ நின்று தன்னை அளிக்கிறான். அயோத்யாகாண்டம் (3-29) – பும்ஸாம் - ஆண்களையும் அபகரித்தான் - என்பதற்கு ஏற்ப, அத்தகைய “அழகு, கொடை, சீலம்” ஆகியவை வயிரம் போன்று அறுப்பதாக உள்ளது; அதாவது, பலம் இழந்த பெண்களை மட்டுமே அல்லாமல், வலிய நெஞ்சம் கொண்டவர்களையும் கூட தடுமாறச் செய்தது. அல்லது “ப்ரக்ருதி, புருஷர்கள்” என்பதாக, அசித்தைக் காட்டிலும் வேறுபட்ட அனைவரையும் ஈடுபடுத்தக்கூடியது என்றும் உரைக்கலாம். அயோத்யாகாண்டம் (3-29) - த்ருஷ்டி சித்த அபஹாரிணம் - கண்ணையும் மனத்தையும் அபகரிக்கவல்ல – என்பதற்கு ஏற்ப, கண்ணிற்கு மனதின் உதவி அவசியம் இன்றி, கண்ணைத் தொடர்ந்து மனம் சென்றது. “தாய் வேறு கன்று வேறு – கைகேயி வேறு, பரதன் வேறு” என்று மாற்றிய விஷயம் அல்லவோ?

வ்யாக்யானம் - (முன்னையமரர்) “யத்ர ருஷய: ப்ரதம ஜாயே புராணா:” என்னும்படி இருக்கிறவர்கள். (முதல்வன்) நித்யஸூரிகளுக்கும் ஸத்தாஹேதுவாயிருக்கிற மேன்மையுடையவன். நித்யாநுபவம் பண்ணுவார்க்கும் நித்யஸ்ப்ருஹா விஷயமான விஷயத்திலேயன்றோ நான் அகப்பட்டது. (வண் துவராபதி மன்னன்) ஓலக்கங் கொடுத்துக் கொண்டிருக்கிற, துறையல்லாதத்திலேயோ நான் இழிந்தது; பெண்களுக்கு உடம்பு கொடுத்திருக்கிற நம் துறையிலேயன்றோ நான் இழிந்தது. “பதினாறாமாயிரவர் தேவிமார் பணி செய்யத் துவரையென்னுமதில் நாயகராகி வீற்றிருந்த மணவாளர் மன்னு கோயில்” என்னக்கடவதிறே. (மன்னன்) மேன்மை

தோற்ற ஓலக்கங் கொடுத்துக் கொண்டிருக்கிறவிடமே நன்றாய்விட்டது, நீர்மை தோற்றவிருக்கிறவிடத்தில் விழுகிற பிரம்புகளிற்காட்டில்.

விளக்கம் - (முன்னை அமரர்) - யஜுர் வேதத்தில், "யத்ர ருஷய: ப்ரதம ஜாயே புராணா: - எந்த ஒரு பரமபதத்தில் முனிவர்களும் நித்யஸூரிக்ளும்" என்று கூறுவதற்கு ஏற்ப உள்ளவர்கள். (முதல்வன்) - நித்யஸூரிகளும் நிலைத்து நிற்பதற்குக் காரணமான மேன்மை கொண்டவன். அவனை எப்போதும் அனுபவித்தபடி உள்ளவர்கள் கூட அப்போதைக்கு அப்போது ஆசைப்படக்கூடிய விஷயமாக உள்ள அவனில் அன்றோ நான் அகப்பட்டேன்? (வண் துவராபதி மன்னன்) - தனது முதன்மை வெளிப்படும்படியாக, அரசவையில் வீற்றுள்ள கம்பீரம் இல்லாத விஷயத்திலேயா நான் ஈடுபட்டேன்? பெண்களுக்குத் தனது திருமேனியை அளித்தபடி உள்ள விஷயத்தில் அல்லவோ நான் ஈடுபட்டேன்! பெரியதிருமொழி (4-9-4) - பதினாறாமாயிரவர் தேவிமார் பணி செய்யத் துவரையென்னுமதில் நாயகராகி வீற்றிருந்த மணவாளர் மன்னு கோயில் - என்பது காண்க. (மன்னன்) – தன்னுடைய நீர்மையைக் காண்பித்து, அனைவரிடமும் அடி வாங்குவதைக் காட்டிலும், தனது மேன்மை வெளிப்படும்படி இங்கு வந்து அமர்ந்துள்ள நிலை மேலானதாகவே உள்ளது; ஏன் இந்த வெறுப்பு? நான் ஒருவள் மடல் எடுத்தால் தவிர்க்கலாம், இங்கு பதினாயிரம் பெண்கள் மடல் எடுக்கப்படி நிலைமை உள்ளது அல்லவோ?

வ்யாக்யானம் - (மணிவண்ணன்) அவ்விரண்டும் இல்லையேயாகிலும் விடவொண்ணாத தாயிற்று வடிவழகு. ப்ரணயிநி துவக்குண்பது வடிவழகிலேயிறே. (வாசுதேவன்) வடிவழகில்லையேயாகிலும் விடவொண்ணாதாயிற்றுக் குடிப்பிறப்பு. "ஸ்நுஷா தசரதஸ்யாஹம்"; பிராட்டி, தனக்குப் பேற்றுக்குடலாக நினைத்திருப்பது "சக்ரவர்த்தி மருமகள்" என்னுமித்தையே காணும். "சத்ரு ஸைந்ய ப்ரதாபிந:"; எங்கள் மாமனாருண்டாகில் எனக்கு இவ்விருப்பு இருக்கவேணுமோ? சத்ருக்களும் ஜீவிக்க, ஜீவித்தவரோ அவர்.

விளக்கம் – (மணிவண்ணன்) - இந்த இரண்டும் இல்லை என்றாலும் விட இயலாதபடி வடிவழகு உள்ளது. காதலி தடுமாறுவது வடிவழகில் அல்லவோ? (வாசுதேவன்) - வடிவழகு இல்லை என்றாலும் விட இயலாதபடி

வஸுதேவருடைய குலத்தில் பிறந்த மேன்மை உள்ளது. இவ்விதம் குலத்தின் பிறப்பு என்ற மேன்மை விட இயலாதபடி உள்ளதற்கான ப்ரமாணம் காண்பிக்கிறார். ஸுந்த்ரகாண்டம் (33-15) – ப்ருத்திவ்யாம் ராஜஸிம்ஹானாம் முக்யஸ்ய விதிதாத்மன: ஸ்நுஷா தசரதாஹ்யம் சத்ரு ஸைந்ய ப்ரதாபின: - உலகில் உள்ள அனைத்து அரசர்களுக்கும் அரசரும், ஆத்ம ஸ்வரூபத்தைக் கண்டவரும், எதிரிகளின் படைகளை எரிப்பவரும் ஆகிய தசரதருக்கு நான் நாட்டுப்பெண் - என்ற ச்லோகத்தை கூறுகிறார். (ஸ்நுஷா தசரதாஹ்யம்) - தனக்குப் பொருத்தமான பேறாக சீதை எண்ணுயிருப்பது "சக்ரவர்த்தி மருமகள்" என்பதையே ஆகும். (சத்ரு ஸைந்ய ப்ரதாபின:) - எதிரிகளின் படைகளை எரிப்பவரும் - என்னும்படி உள்ள எங்கள் மாமனார் இருந்திருந்தால், எனக்கு இந்த நிலை ஏற்படுமோ? தனது பகைவர்களும் பிழைக்கும்படியாக, தான் வாழ்ந்தரோ அவர்?

வ்யாக்யானம் - (முன்னையமரர் இத்யாதி) நைர்க்ருண்யத்தோடு நீர்மையோடு, ஊராருடைய பழியோடு புகழோடு வாசியற்றாற்போலே, அவன் மேன்மையோடு ஸௌலப் யத்தோடு வாசியற இரண்டும் ஆகர்ஷகமாயிருக்கிறதாயிற்று இவர்க்கு. (வலையுள் அகப்பட்டேன்) அப்பொதுவானதிலன்றிக்கே, அவன் என்னைக் குறித்து நோக்கின நோக்கிலும் ஸ்மிதத்திலுமன்றோ நான் அகப்பட்டது. ஆழ்வார் திருவரங்கப்பெருமாளரையர் வலையாக அபிநயித்துப் பாடாநிற்க, திருக்கண்களைக் காட்டியருளினார் எம்பெருமானார்; "கமலக்கண்ணென்னும் நெடுங்கயிறு" என்னக்கடவதிறே. அநுகூலம் போலேயிருந்து தப்பாதபடி அகப்படுத்திக்கொள்ளும் நோக்கிலே அகப்பட்டேன்.

விளக்கம் - (முன்னை அமரர் இத்யாதி) - அவனுடைய க்ருபையற்ற தன்மை மற்றும் நீர்மை, ஊராருடைய பழிச்சொற்கள் மற்றும் புகழ் உரைகள் என்பது போன்ற வேறுபாடுகளைக் காணாமல் உள்ளது போன்று, அவனுடைய மேன்மை மற்றும் எளிமை ஆகிய வேறுபாடு இன்றி, இரண்டுமே கவர்ந்து இழுப்பதாக இவருக்கு உள்ளது. (வலையுள் அகப்பட்டேன்) - இவ்விதம் அனைவருக்கும் பொதுவாக உள்ளவை மட்டுமே அல்லாமல், அவன் என்னைக் குறித்து மட்டுமே நோக்கிய பார்வையிலும் புன்னகையிலும் அல்லவோ நான் அகப்பட்டேன்? ஆழ்வார் திருவரங்கப்பெருமாள் அரையர் எம்பெருமாருடைய திருக்கண்களை வலையாகக் கற்பனை செய்து பாடும்போது தனது திருக்கண்களை அவர் காண்பித்தார். நாச்சியார் திருமொழி (14-4) – கமலக்கண்ணன் என்னும் நெடுங்கயிறு - என்பது

காண்க. எனக்கு நன்மை செய்வதாக இருந்தபடி நின்று, நான் தப்பாதபடியாக என்னை அகப்படுத்திக் கொள்ளும் பார்வையில் நான் அகப்பட்டேன்.

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்வாமி ஆளவந்தார் அருளிச் செய்த

ஸ்தோத்ர ரத்னம்

இதற்கு ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை

அருளிச் செய்த வ்யாக்யானம்

(பகுதி – 70)

26. நிராஸகஸ்ய அபி ந தாவத் உத்ஸஹே மஹேச! ஹாதும் தவ பாத பங்கஜம்
ருஷா நிரஸ்த: அபி சிசு: ஸ்தநந்தயோ ந ஜாது மாது: சரணௌ ஜிஹாஸதி

பொருள் - ஸர்வேச்வரனே! என்னை நீ உன்னிடமிருந்து அகற்றினாலும், உனது தாமரை போன்ற திருவடிகளை விட்டு அகல்வதற்கு நான் முனையமாட்டேன். தாய்ப்பால் பருகும் குழந்தையானது, தனது தாயால் கோபம் கொண்டு தள்ளப்பட்டாலும், தனது தாயின் கால்களை அது எந்த நிலையிலும் விட எண்ணாது அல்லவோ?

அவதாரிகை – “தேவருடைய ரக்ஷணாபாவத்தால் வந்த தேஜோஹாநியையும் பாராதே என்னைக் கைவிடுமன்றும், நான் விடப் பார்க்கிறிலேன்” என்று, தம்முடைய அகதிகத்வத்தாலே, தம்முடைய மஹா விச்வாஸத்தை ஆவிஷ்கரிக்கிறார்.

விளக்கம் – “உன்னுடைய காப்பாற்றும் தன்மையால் உண்டாகும் ஒளி வீசும் தன்மை கொண்ட உனது திருமேனிக்குத் தாழ்வு ஏற்படும் என்றாலும், அதனைப் பொருட்படுத்தாமல் என்னை நீ கைவிட்டாலும், உன்னை நான் விட முயல மாட்டேன்”, என்று, வேறு கதி இயலாத தன்மையால் தனது மஹாவிச்வத்தை வெளிப்படுத்துகிறார்.

வ்யாக்யானம் - (நிராஸகஸ்யாபி) ரக்ஷகத்வம் ஸ்வரூபமாயிருக்கிற தேவர், நிராஸகராக ப்ரஸங்கமில்லை; இப்படிப்பட்ட தேவர் நிஷ்கருணராய் நிராஸகரானாலும். (தவ பாத பங்கஜம் தாவத் ஹாதும் ந உத்ஸஹே) ரக்ஷகமுமாய், ப்ராப்தமுமாய், போக்யமுமான திருவடிகளை முந்துற முன்னம் விட்டு ஜீவிக்க ச்ரத்தை பண்ணுகிறிலேன். “கண்டார் இகழ்வனவே காதலன் தான் செய்திடினும், கொண்டானையல்லால் அறியாக் குலமகள் போல்” என்று தேவர் ரக்ஷகரன்றியிலேயொழிந்தாலும், புறம்பு போக்கில்லை என்கை. (மஹேச) “தமீச்வராணாம் பரமம் மஹேச்வரம்” என்றும், “ஈச்வரஸ் ஸர்வபூதாநாம்” என்றும் சொல்லுகிறபடியே நிருபாதிக நிர்வாஹகனானவனே! ஸம்ஸாரத்தில் பந்தங்களைப்போலே கர்மோபாதிகமாய், புறம்பே போய் உஜ்ஜீவிக்கிறேனோ? “ஸுஹ்ருதம் ஸர்வபூதாநாம்”, “ஸர்வேஷாமேவ லோகாநாம் பிதா மாதா ச மாதவ:” என்னும் நிருபாதிகமான பரிவும் ஸம்பந்தமும் புறம்பேயுண்டாய், தேவரை விட்டுப்போய் உஜ்ஜீவிக்கவோ?

விளக்கம் - (நிராஸகஸ்யாபி) - காப்பாற்றும் தன்மை என்பதையே ஸ்வரூபமாகக் கொண்டுள்ள நீ விலக்குவனாக இருப்பதற்கு வாய்ப்பு இல்லை. இப்படிப்பட்ட நீ, கருணை இன்றி விலக்குபவனாக இருந்தாலும். (தவ பாத பங்கஜம் தாவத் ஹாதும் ந உத்ஸஹே) – காப்பாற்றுவதும், அடையப்படவேண்டியதும், இன்பமாக உள்ளதும் என உள்ள உனது திருவடிகளை முதலில் விட்டு, வாழ்வதற்கு நான் ஆலோசிக்கவில்லை. பெருமாள் திருமொழி (5-2) - கண்டார் இகழ்வனவே காதலன் தான் செய்திடினும், கொண்டானையல்லால் அறியாக் குலமகள் போல் – என்று நீ காப்பாற்றும் தன்மையை விடுத்தாலும் வேறு இடம் போகமாட்டேன். (மஹேச) – ச்வே. (6-7) – தம் ஈச்வராணாம் பரமம் மஹேச்வரம் – அனைத்து ஈச்வரர்களுக்கும், மேலான ஈஸ்வரனாக உள்ள அவனை - என்றும், கீதை (18-61) – ஈச்வர: ஸர்வபூதாநாம் - அனைத்திற்கும் ஈச்வரனாக உள்ள – என்றும் கூறுவதற்கு ஏற்ப, எந்தவிதமான காரணமும் இன்றி அனைத்தையும் நிர்வாகம் செய்பவனே! ஸம்ஸாரத்தில் காணப்படும் பந்தங்கள் போன்று, கர்மங்களால் பீடிக்கப்பட்டவனாக, உன்னை விட்டு அகன்று சென்று நான் வாழ்கிறேனா? கீதை (5-29) - ஸுஹ்ருதம் ஸர்வபூதாநாம் - அனைத்து உயிர்களுக்கும் நண்பனாக – என்றும், மஹாபாரதம் ஆரண்யபர்வம் (192-56) – ஸர்வேஷாம் ஏவ லோகாநாம்

பிதா மாதா ச மாதவ: - அனைத்து லோகத்திற்கும் தந்தையாகவும் தாயாகவும் மாதவனே உள்ளான் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, எந்தவிதமான காரணமும் இன்றி ஏற்படுகிற பரிவு மற்றும் ஸம்பந்தம் ஆகியவற்றை மற்றவர்களிடம் கண்டு, உன்னை விட்டு அகன்று சென்று பிழைக்கவோ?

வ்யாக்யானம் - (ஸ்தநந்தயச் சிசு: ருஷா நிரஸ்தோபி) ஸ்தந்யமே தாரகமான சிசுவானது, ஜநநியாலே க்ரோதமடியாக விடப்பட்டாலும். ஸ்வரக்ஷணத்திலே சக்தியின்றிக்கே, ததேகரக்ஷ்யமான தசையச் சொல்லுகிறது. இவ்வாத்ம வஸ்து ஈச்வரைகரக்ஷ்யமாய், நித்ய ஸ்தநந்தயமாயிறே இருப்பது. "அரிசினத்தால் ஈன்ற தாய் அகற்றிடினும் மற்றவள் தன் அருள் நினைந்தே அழுங்குழவி"; "ஈன்ற தாய்" என்றும், "அரிசினம்" என்றும் விருத்த தர்மம், ஏகாச்ரயத்தில் ஸம்பவியாது என்கை. பிதாவுக்கு ஹிதார்த்தமாக க்ரோதம் ஸம்பவித்தாலும், மாத்ரு விஷயத்தில் ஸம்பாவனை இல்லையிறே. (ஜாது) க்ருத்தையான போதோடு, ஆதரித்த போதோடு வாசியற. (மாதுச்சரணௌ ந ஜிஹாஸதி) கையாலே தள்ளுகையன்றிக்கே, காலாலே தள்ளிலும், அந்தக் காலைக் கட்டிக்கொள்ளுமத்தனை யொழிய, புறம்பு போகப் பாராதாப்போலே.

விளக்கம் - (ஸ்தநந்தயச் சிசு: ருஷா நிரஸ்தோபி) - தாய்ப்பாலை மட்டுமே தனது ஆதாரமாகக் கொண்டுள்ள கைக்குழந்தையானது, தனது தாயால் கோபம் காரணமாக விடப்பட்டாலும், தன்னைக் காப்பாற்றிக் கொள்ளுதல் என்பதில் சக்தி இல்லாமல், அவளை மட்டுமே தனக்குப் பாதுகாப்பாக கொண்டுள்ள நிலையைக் கூறுகிறார்அந்த ஆத்மாவானது ஈ .ச்வரனால் மட்டுமே காப்பாற்றப்படுவதாக, எப்போதும் தாய்ப்பால் பருகும் குழந்தை போன்று உள்ளதாகும்பெருமாள் . திருமொழி)5-1) –அரிசினத்தால் ஈன்ற தாய் அகற்றிடினும் மற்றவள் தன் அருள் நினைந்தே அழுங்குழவிஎன்பதில் உள்ள - "ஈன்ற தாய்ஆ "அரிசினம்" மற்றும் "கிய இரண்டும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட பண்புகள் ஆகும் .ஆகவே அவை இரண்டும் ஒரே இடத்தில் இருக்கமுடியாதுதனது புத்திரன் விஷயத்தில் ., அவனுடைய நன்மை காரணமாக, தந்தைக்குக் கோபம் ஏற்படலாம்; ஆனால் தாய்க்கு அது போன்று ஏற்படுவதில்லை.)ஜாது(-தள்ளும் நிலை மற்றும் ஆதரித்த நிலை என்பதான வேறுபாடு இன்றி.)மாதுச்சரணௌ ந ஜிஹாஸதி(கையால் -

தள்ளுவது மட்டுமே அல்லாமல் கால்களால் தள்ளினாலும், அந்தக் கால்களைக் கட்டிக் கொள்ளுதல் அல்லாமல் வேறு இடம் செல்லாதது போன்று உள்ளேன்.

ஸ்வாமி ஆளவந்தார் திருவடிகளே சரணம்

ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்